# பனிமயம்

ஏப்ரல் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

"கடவுளாகிய ஆண்டவரே, எல்லாம் வல்லவரே, உம் செயல்கள் பெரியன, **வியப்புக்குரியன**" (திவெ 15:3) என்பது விண்ணுலகோர் பாடும் வெற்றிப் பாடல். கடந்த மாதம் முழுவதும் இறைவன் நம்மை எல்லாத் தீமைகளினின்றும் பாதுகாத்தார். நம் பேராலயத்தின் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன. ஆண்டவரின் வியப்புக்குரிய செயல்களுக்காக நன்றி செலுத்துவோம்.

இந்த மாதம் இயேசுவின் பாஸ்கா விழாவைக் கொண்டாடி, அவருடைய உயிர்ப்பில் மகிழவிருக்கிறோம். "ஒருவரின் குற்றம் எல்லா மனிதருக்கும் தண்டனைத் தீர்ப்பாய் அமைந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் **விடுதலைத் தீர்ப்பாய்** அமைந்தது" (உரோ 5:18) என்று பவுலடியார் சொல்வதுபோல, இயேசுவின் கீழ்ப்படிதல் அவருக்கு மட்டுமல்ல, அவரில் நம்பிக்கை கொள்ளும் அனைவருக்குமே விடுதலையைப் பெற்றுத் தந்தது..

"அவர் தாம் அடையவிருந்த **மகிழ்ச்சியின்** பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். இப்போது, கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12:2) என்று இயேசுவைப் பாராட்டுகிறது எபிரேயர் திருமடல். ஆம், இயேசுவைப் போலவே நாமும், நம் சிலுவைகளை ஏற்றுக்கொண்டால், மகிழ்ச்சி என்னும் கொடையைப் பெறுவோம்.

"எப்பொழுதும் **மகிழ்ச்சியாக** இருங்கள்" (1 தெச 5:16) என்பதே நமது பாஸ்கா கால விருதுவாக்காக அமையட்டும்!

சாவை வென்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 8
பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**நலவாழ்வுப் பணியாளர்களுக்காக...**

நோயுற்றவர்களுக்கும் முதியவர்களுக்கும் தொண்டு செய்யும் மருத்துவர்கள், செவிலியர்கள், நலவாழ்வுப் பணியாளர்கள் போதிய அளவில் அரசுகள் மற்றும் உள்ளூர்ச் சமூகங்களால் ஆதரிக்கப்பட நாம் மன்றாடுவோம்

# உள்ளே...

1. குழந்தைகளும் தவம் செய்யட்டும்! ....................................4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித பிஞ்சென் ஹில்டகாட் ....................................6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ....................................8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ......10
செல்வராஜ் மிராந்தா

5. மாதம் ஒரு மாதா படம் ....................................13

6. பனிமயம் - மீள்பார்வை ....................................14
கலாபன் வாஸ்

7. நம் திருச்சபை, நமது பெருமை ....................................16
"க்றிஸ் மிலியன்"

8. விவிலியப் போட்டி ....................................18

9. பனிமய சாட்சியம் ....................................20

10. பனிமயப் பகிர்வு ....................................21

11. புனித வாரத் திருநிகழ்வுகள் - 2022 ....................................24

மரியன்னையின் மேன்மைகள் : 26

# குழந்தைகளும் தவம் செய்யட்டும்!



அன்னை மரியா குழந்தைகளையும் தவம் செய்ய ஊக்குவித்தார்கள் என்பது நம்மை வியப்படையச் செய்யும் ஒரு செய்தி. பாத்திமா நகரில் 1917ஆம் ஆண்டு பிரான்சிஸ்கோ, ஜெசிந்தா, லூசியா ஆகிய மூன்று சிறியோருக்கு அன்னை மரியா காட்சி தந்தார்கள். பாவிகள் மனந்திரும்ப அவர்கள் செபமும், தவமும் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இந்தக் குழந்தைகள் செபித்தார்கள், தவம் செய்தார்கள்.

இந்தக் குழந்தைகளுக்கு என்ன வயது? காட்சிகள் கண்டபோது அவர்களின் வயது 7, 9, 10தான். இத்தனை சிறிய குழந்தைகளாக இருந்தாலும், அவர்கள் தியாகங்களைச் செய்ய முன்வந்தார்கள். சில நேரங்களில் உணவு உண்ணாமல் நோன்பிருந்தார்கள். சில நேரங்களில் இடுப்பில் வலி தரும் கச்சையை அணிந்து அந்த வேதனையைப் பாவிகள் மனந்திரும்ப கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஒருமுறை மூவரும் செபமாலை செபித்துக்கொண்டிருக்கும்போது, அன்னை மரியா காட்சி தந்தார்கள். லூசியா அன்னையிடம் கேட்டார்: "நான் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" "கடவுள் உங்கள் தவ முயற்சிகளில் மகிழ்ச்சி அடைந்துள்ளார். ஆனால், இடுப்பில் அணியும் கச்சையைப் பகலில் அணிந்தால் போதும். இரவில் வேண்டாம்" என்பது அன்னையின் வியத்தகு பதில்.

ஆம், குழந்தைகளும் தவம் செய்ய வேண்டும். ஆனால், தீவிர ஒறுத்தல்கள் தேவையில்லை. சின்னச் சின்ன தியாகங்களைச் செய்ய நாம் குழந்தைகளை ஊக்குவித்தால் போதும். லூசியாவே அருள்சகோதரியான பிறகு "ஏமாற்றங்களை

இறைவாக்கினர் யோனா நூலில் ஒரு காட்சி: "நினிவே நகரம் இன்னும் 40 நாளில் அழிந்துவிடும் என்று யோனா இறைவாக்குரைத்தபோது, நினிவே அரசன் ஓர் ஆணை பிறப்பித்தான். அதில் எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. **ஆடு, மாடு முதலிய விலங்குகளும்** தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும் **விலங்குகளும்** சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும்" (யோனா 3: 7-8) என்று அறிவித்ததை வாசித்து நாம் வியப்படைகிறோம்.

நினிவே நகரில் விலங்குகளே தவம் செய்தன என்றால், நமது குழந்தைகளும் தவம் செய்தால் என்ன? இத்தவக்காலத்தில் நமது குழந்தைகளுக்கும் ஒறுத்தல் முயற்சிகளில் பயிற்சி கொடுப்போமாக!

ஏற்றுக்கொள்வது, இகழ்ச்சிகளைப் பொறுத்துக் கொள்வது போன்ற சிறிய தவ முயற்சிகளை நாம் செய்யலாம்" என்று பரிந்துரைத்தார்கள். குழந்தைகளோ பிடித்தமான உணவுப் பொருள்களைத் தியாகம் செய்வது, பிடிக்காத உணவை உண்ணுவது, தொலைக்காட்சி, அலைபேசியைப் பயன்படுத்தாமல் இருப்பது, வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவுவது போன்றவற்றை ஒறுத்தல்களாகப் பழகலாம்.

லூர்து நகரில் பெர்னதத்துக்கு அன்னை மரியா காட்சி தந்தபோது, அவருக்கு வயது 14தான். அன்னையின் "தவம், தவம், தவம்" என்னும் வேண்டுகோளை ஏற்று அவரும் ஒறுத்தல் முயற்சிகளைச் செய்தார். பாவிகள் மனந்திரும்புவதற்காக முழங்காலில் இருந்து, ஊர்ந்து சென்று, மண்ணை முத்தமிட்டார். இன்று நம்முடைய குழந்தைகள் முழந்தாட்படியிடவே சலிக்கிறார்களே! முழந்தாள்படியிட அவர்களைப் பழக்குவோம்.

இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் லூர்து நகரில் குடிக்கும் புதுமைத் தண்ணீர் ஊற்று எப்படி சுரந்தது? பெர்னதத்தின் தியாகத்தால்தான்! அன்னை மரியா அந்த இடத்தை சுட்டிக்காட்டி, கையால் தோண்டச் சொன்னார். தோண்டியபோது முதலில் வந்தது சேறும், சகதியும் கலந்த தண்ணீர்தான். அதைத்தான் பெர்னதத் குடித்தார். அதன்பின்தான் தூய தண்ணீர் அங்கே ஊற்றெடுக்கத் தொடங்கியது.

பின்னர் அருள்சகோதரியாகி மறைந்த வாழ்வு வாழ்ந்தபோதும், பெர்னதத் செபத்தையும், தவத்தையும் கைவிடவில்லை. தமது 35ஆம் வயதில் இறைவனடி சேர்வதுவரையில் தமது நோய்கள், துன்பங்களையெல்லாம் தியாக உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தார். குழந்தைப் பருவத்துப் பயிற்சி அவருக்கு உதவியது என்று சொல்வது மிகையல்ல.

1960களில் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் வால்டர் மிஷல்



நடத்திய "ஜெல்லி மிட்டாய் பரிசோதனை" (The Marshmallow Experiment) மிகப் பிரபலமானது. நான்கு, ஐந்து வயதுடைய நூற்றுக்கணக்கான குழந்தைகளிடம் இந்தப் பரிசோதனையை அவரது குழுவினர் நடத்தினர். ஒவ்வொரு குழந்தையாக ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று ஒரு ஜெல்லி மிட்டாயைக் கையில் கொடுத்து, "நான் வெளியே போய்விட்டு வரும்வரையில் இதை சாப்பிடாமல் வைத்திருந்தால், இன்னொரு மிட்டாய் தருவேன்" என்று சொல்லிவிட்டு அறையைவிட்டு வெளியேறுவர். பதினைந்து நிமிடங்கள் கழித்து திரும்பி வருவர். சில குழந்தைகள் அவர் வெளியே போனவுடனேயே மிட்டாயை சாப்பிட்டு விட்டனர். இன்னும் சிலர் சில நிமிடங்கள் தாக்குப்பிடித்தனர். சிலர் மட்டுமே 15 நிமிடங்களும் அதைச் சாப்பிடாமல் தன் கட்டுப்பாடுடன் இருந்து, இன்னொரு மிட்டாயைப் பெற்றுக்கொண்டனர்.

பரிசோதனை அத்துடன் முடியவில்லை. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களை மீண்டும் தொடர்பு கொண்டபோது, தன் கட்டுப்பாடு கொண்ட குழந்தைகள் தேர்விலும், வாழ்விலும் வெற்றியாளர்களாகத் திகழ்ந்தனர்.

தவமிருக்கக் கற்றுக்கொள்ளும் குழந்தைகள் அருள்வாழ்விலும் வளர்வர், உலக வாழ்விலும் வெற்றியாளர்களாகத் திகழ்வர்.

**அருள் மரி வேந்தன்**

53 மரியன்னைப் புனிதர்கள்

# புனித பிஞ்சென் ஹில்டகாட்



(1098 - 1179)

## மரியன்னையைப் போற்றிய மறைவல்லுநர்!

பிஞ்சென் நகர புனித ஹில்டகாட் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அனேகமாக "இல்லை" என்பதுதான் உங்கள் பதிலாக இருக்கும். இந்த ஜெர்மனி நாட்டு பெனடிக்டைன் துறவி பற்றிப் பலரும் அறியாமல்தான் இருந்தனர். ஆனால், 2012 அக்டோபர் 7ஆம் நாள், செபமாலை அன்னையின் திருவிழா அன்று, நடைபெற்ற ஒரு நிகழ்வு அவரை உலகம் முழுவதும் பிரபலப்படுத்திவிட்டது.

அன்றைய நாளில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் "அவரது தூய வாழ்வுக்காகவும், அவரது போதனைகளிலுள்ள தனித்தன்மைக் காகவும்" புனித ஹில்டகாட்டைத் திருஅவையின் வல்லுநர் (Doctor of the Church) என்று அறிவித்தார். திருஅவையின் வல்லுநர் என்னும் பெருமை படைத்த பெண்கள் **நான்கே நான்கு பேர்தான்.** புனித சீயன்னா கத்தரீன், புனித அவிலா தெரசா, புனித குழந்தை தெரசா மூவரும் அனைவரும் நன்கு அறிந்த பெயர்கள். ஆனால், இவர்கள் மூவருக்கும் காலத்தே முந்தியவர், தனித் தன்மை வாய்ந்தவர் என்னும் சிறப்புடைய புனித ஹில்டகாட் அதிகமாக அறியப்படாதது வியப்பே.

அதுவரையில் ஜெர்மனியிலும், ஐரோப்பிய நாடுகளிலுமே அதிகமாக அறியப்பட்ட புனித ஹில்டகாட்டை, மறைவல்லுநர் என்று அறிவிக்கப்பட்டபிறகு, உலகமே கொண்டாடியது. அவரது வாழ்க்கை வரலாறு ஜெர்மானிய மொழியில் திரைப்படமாக்கப்பட்டு, அமெரிக்காவிலும் வெளியாகியது. அவரது பெயரால் கலை மற்றும் ஆன்மீக நடுவம் ஒன்று தொடங்கப்பட்டு, பாசறைகள், பயிற்சிகள், கருத்தமர்வுகள் நடத்தப்பட்டன. அவர் இசையமைத்த சிம்பொனி பாடல்கள் பிரபலமாகி, யூட்யூப் சேனலில் மில்லியன் கணக்கில் மக்கள் அவற்றைக் கேட்டனர். அவரது எழுத்துகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட, அவற்றை வாசித்து, அவரது இறையியல் பற்றி குருமடங்களில் உரையாடினர்.

புனித ஹில்டகாட்டின் பன்முக ஆளுமை நம்மை வியப்படைய வைக்கிறது. எழுத்தாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், இயற்கை மருத்துவர், சிந்தனையாளர், காட்சியாளர், படைப்பாற்றல் மிக்க துறவி எனப் பல பரிமாணங்கள் காட்டியுள்ளார்.

ஜெர்மனி நாட்டில் 1098ஆம் ஆண்டு உயர்குடிப் பெற்றோரான மெக்டில்ட் -

ஹில்டபெர்ட் தம்பதியரின் பத்தாவது குழந்தையாகப் பிறந்தார். பிறப்பிலிருந்தே நோய்வாய்ப்பட்டவராகவே இருந்த ஹில்டகாட், குழந்தைப் பருவத்திலிருந்தே காட்சிகள் காணத் தொடங்கினார். தமது 14ஆம் வயதில் பெனடிக்டைன் துறவியர் சபையில் சேர்ந்து துறவியானார். சபையின் தலைவியான சகோதரி ஜட்டா அவருக்கு ஆசிரியர்போல இருந்து மொழி, இசை, இசைக்கருவிகள் போன்றவற்றைக் கற்றுக்கொடுத்தார். ஜட்டாவின் இறப்புக்குப் பிறகு, 1136ஆம் ஆண்டு சபைத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். புதிய கன்னியர் இல்லங்களை உருவாக்கினார். வழிபாட்டு வேளைகளில் பாடுவதெற்கென பாடல்களை எழுதி, அவரே இசையமைத்தார். தம் சபையின் சகோதரிகளுக்கு 58 மறையுரை மடல்களை எழுதியுள்ளார்.

குழந்தைப் பருவத்திலிருந்தே வெளிப்பாடுகள் பெற்றிருந்தாலும், தமது 43ஆவது வயதில்தான் தம் ஆன்ம குருவிடம் அவற்றைப் பகிர்ந்தார். மெயின்ஸ் பேராயரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் ஹில்டகாட்டின் காட்சி அனுபவங்கள் உண்மையே என்று அறிவித்தனர். அவரது 26 காட்சிகளைத் தொகுத்து எழுத ஒரு துறவியையும் நியமித்தனர். அவ்வாறு எழுதப்பட்ட “காட்சிகள்” (Scivias) என்னும் ஆன்மீக நூல் புகழ்பெற்றது. தமது 77ஆவது வயதில் அவர் எழுதிய “ஒளியின் சிதறல்” (The Reflection of the living Light) என்னும் நூல் அவரது அனுபவங்களை விவரிக்கிறது.

புனித ஹில்டகாடின் எழுத்துகளில் இறையனுபவம் பொங்கி வழிகிறது. கடவுளின் பேரன்பு, அவரது மீட்புச் செயல், இறை-மனித உறவு போன்றவற்றைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். அன்னை மரியாவைப் பற்றியும் அவர் எழுதியுள்ளவை 12ஆம் நூற்றாண்டின் மரியன்னைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

அன்னை மரியாவின் நல்லியல்புகளைப் பெருமைப்படுத்தி எழுதியுள்ளார் ஹில்டகாட். அவர் காலத்தைய இறையியலார் மற்றும் அவருக்கு முந்தைய திருஅவைத் தந்தையரைப் போன்றே ஹில்டகாட்டும் மரியன்னையின் தூய்மை, கன்னிமை பற்றி எழுதியுள்ளார். அன்னை மரியாவின் கன்னிமை நம் அனைவருக்கும் சிறந்த மாதிரி. அவரது கன்னிமை கடவுள் அவருக்கு வழங்கிய மாபெரும் அருள்கொடை என்றார். அன்னை மரியாவின் தாழ்ச்சியையும், பிறரன்பையும் வியந்து எழுதியுள்ளார் ஹில்டகாட். மரியாவின் தாழ்ச்சியே அவர் கிறிஸ்துவை ஈன்றெடுக்க வழிகோலியது என்பது அவரது வாதம்.

“இறைவன் கதிரவனுக்கு ஒரு கூடாரம் அமைத்துள்ளார்” என்னும் திருப்பாடல் 19:4 இறைமொழியை விளக்கும் புனித ஹில்டகாட் இயேசுவைக் கதிரவனாகவும், அவரைத் தாங்கிய கூடாரமாக அன்னை மரியாவையும் வர்ணிக்கிறார். பிற்காலத்தில் புனித பொனவந்தூர் அன்னை மரியாவை “இயேசுவைத் தாங்கிய பேழை” என்று அழைத்ததை முன்கூட்டியே எடுத்துரைத்துள்ளார்.

ஹில்டகாட் இயற்றிய 63 சிம்பொனிப் பாடல்களில், 16 பாடல்கள் மீட்பின் வரலாற்றில் மரியன்னையின் பங்கைப் புகழ்கின்றன. கடவுளின் மீட்புத் திட்டத்தில் மரியா சிறப்பானதோர் இடத்தை வகித்தார் என 12ஆம் நூற்றாண்டிலேயே அவர் எழுதியுள்ளது பிற்கால மரியியல் சிந்தனையாளர்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அன்னை மரியா புதிய ஏவாள் என்னும் புனித ஐரனேயசின் அடியொற்றி, முதல் ஏவாள் முறித்ததை இணைத்தவர், அவர் காயப்படுத்தியதைக் குணமாக்கிய தாய் என்று எழுதியுள்ளார்.

தமது 81ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது திருவிழா செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படுகிறது.



**அருள்பணி. குமார்ராஜா**

பனிமய அன்னை 18

# 'பெரிய கோயில்'

## இரட்டை ஆட்சி

**பாப்பரசர் 9-ஆம் பத்திநாதர்** (Pope Pius IX, 1846-1878) ஏற்கனவே தடைச் செய்யப்பட்டிருந்த பதுரவாதோ ஞான அதிகாரத்தை Concordate of 1857 என்ற பத்திரத்தின் மூலம் 1857-ஆம் ஆண்டில் புதுப்பித்தார். இதன் மூலம் போர்த்துக்கீசிய அரசும், விசுவாசப் பரம்புதல் சபையும் செலுத்திய **'இரட்டை ஆட்சி'** முறையினால், முத்துக்குளித்துறையில் ஞான அதிகாரக் குழப்பங்கள் பெருகின.



இதற்கு தீர்வு காணும் வகையில், **பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர்** (Pope Leo XIII, 1878-1903), 1886-ஆம் ஆண்டு ஜூன் 23-ஆம் நாளன்று போர்த்துக்கீசிய அரசுடன் New Concordate of 1886 என்ற ஒப்பந்தமொன்று செய்துகொண்டார்.

அதன்படி, முத்துக்குளித்துறையில் 5 ஊர்கள் நீங்கலாக, பதரவாதோ ஞான அதிகாரம் நீக்கப்பட்டது.

1886-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் நாளன்று 'Humane Salutis' (மனித அருள் மீட்பு) என்ற திருமடல் மூலம் பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர் இந்தியாவில் மறை ஆட்சியை ஏற்படுத்தினார். இந்தியாவில் திருமறையைப் பரப்பும் எண்ணத்துடன் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்ட அப்போஸ்தலிக்க மறைவட்டங்களாக செயல்படும் **விக்காரியேட்டுக்கள்** அனைத்தும், தனிப்பட்ட மறைமாவட்ட நிலைக்கு உயர்த்தப்பட்டன. இது மூலம் 1887-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி விக்காரியேட் **'திருச்சி மறைமாவட்டம்'** என்று உயர்த்தப்பட்டது. அதன் முதல் ஆயராக **மேதகு அலெக்சிஸ் கனோஸ்** ஆண்டகை பொறுப்பேற்றார்.

### முத்துக்குளித்துறையின் 5 பங்குகள்

**பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர்** 1886-ஆம் ஆண்டு ஜூன் 23-ஆம் நாளன்று போர்த்துக்கீசிய அரசுடன் New Concordate of 1886 என்ற ஒப்பந்தமொன்று செய்து கொண்டார். அதன்படி, முத்துக்குளித்துறையில் 5 ஊர்கள் நீங்கலாக பதுரவாதோ ஞான அதிகாரம் நீக்கப்பட்டது.

1887-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி விக்காரியேட் 'திருச்சி மறைமாவட்டம்' என்று உயர்த்தப்பட்டபோது, முத்துக்குளித்துறையும் அதன் உள்நாட்டுப் பகுதியும் திருச்சி மறைமாநிலத்தோடு இணைக்கப்பட்டது.

முத்துக்குளித்துறையில் பதுரவாதோ ஞான அதிகாரம் நீக்கப்பட்டு திருச்சி மறை மாநிலத்தோடு இணைக்கப்பட்டாலுங்கூட, போர்த்துக்கீசிய அரசைத் திருப்தி படுத்துவதற்காக பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர், முத்துக்குளித்துறையின் குறிப்பிட்ட 5

பங்குகளை மட்டும் பதுரவாதோ ஞான அதிகாரத்தின் கீழ் உள்ள கோவா மிஷனைச் சேர்ந்த மயிலாப்பூர் மறைமாநிலத்தோடு இணைத்தார்.

முத்துக்குளித்துறையின் அந்த 5 பங்குகளின் ஆலயங்கள் :

1. தூத்துக்குடி - பனிமய அன்னை ஆலயம்
2. வைப்பார் - பரலோக அன்னை ஆலயம்
3. புன்னைக்காயல் - புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்
4. மணப்பாடு - பரிசுத்த ஆவி ஆலயம்
5. கூடுதாழை - மரியன்னை ஆலயம்



1895-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாளன்று, இந்தியாவின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியான (Apostolic Pro-nuncio) **லடிஸ்லாஸ் செலஸ்கி ஆண்டகை** (Archbishop Ladislao Zaleski, 1892-1916) பாப்பரசரின் இந்தப் புதிய ஏற்பாட்டினை செயல்படுத்தினார்.



1929-ஆம் ஆண்டு ஜூன் 29-ஆம் நாளன்று **பாப்பரசர் 11-ஆம் பத்திநாதர்** (Pope Pius XI, 1922-1939) போர்த்துக்கீசிய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பதுரவதோ ஞான அதிகார சலுகை முற்றிலும் உலகெங்கும் நீக்கப்பட்டு, முற்றுப் பெறலாயிற்று.

**தூத்துக்குடி மறைமாவட்டம்**

**பாப்பரசர் 11-ஆம் பத்திநாதர்** (Pope Pius XI, 1922-1939) 1923-ஆம் ஆண்டு ஜூன் 12-ஆம் நாளன்று Quae Catholico Nomini என்ற பத்திரத்தின் மூலம், முத்துக் குளித்துறையை திருச்சிராப்பள்ளி மறை மாநிலத்திலிருந்து பிரித்து, தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தனி மறைமாநிலமாக உயர்த்தினார்.

தூத்துக்குடி மறைமாநிலத்தின் முதல் ஆயராக, தூத்துக்குடி மண்ணில் உதித்த இயேசு சபைக் **கபிரியேல் பிரான்சிஸ் திபூர்சியூஸ் ரோச்** (Gabriel Francis Tiburtius Roche) நியமிக்கப்பட்டார். இவர் இலத்தீன் ரீதியில் இந்தியாவின் முதல் ஆயர் என்பது குறிப்பிட்டதக்கது.

1684-ஆம் ஆண்டிலேயே **மத்தேயுஸ் ஜோசப்** (Mathews Joseph) என்ற கார்மேல் சபைத் துறவியாருவர், தூத்துக்குடியை ஒரு தனி மறைமாநிலமாக்க வேண்டும் என்றும், அதன் ஆயராக ஒரு இயேசு சபைக் குருவையே நியமிக்கவேண்டும் என்றும், விசவாசப் பரம்புதல் சபையின் தலைவரான **அல்சியயாரி பவுலூஸியோ** என்பவருக்கு பரிந்துரைத்து மடல் எழுதியுள்ளார்.

**'பெரிய கோயில்' பனிமய அன்னை ஆலயம்**

1582-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் உள்ள இயேசு சபை தலைமை இல்லமான **சம்பவுல் கல்லூரி**க்காக மட்டுமே ஒரு சிற்றாலயமாக கட்டப்பட்ட அன்னையின் ஆலயம், 1713-ஆம் ஆண்டில் **விஜிலியுஸ் சவேரியுஸ் மான்சி சுவாமி**களால் கற்களாலான ஓர் புதிய ஆலயமாக எழுப்பப்பட்டு, அது நாள் முதல் தூத்துக்குடி மக்களுக்கெல்லாம்

பங்குக் கோவிலாக விளங்கியது மட்டுமல்லாது, மக்கள் அனைவராலும் 'பெரிய கோவில்' என்று வாஞ்சையோடு அழைக்கப் பட்டு வருகின்றது.

1923-ஆம் ஆண்டில் தூத்துக்குடி மறைமாநிலம் உருவாக்கப்பட்டப் பிறகும், பனிமய அன்னையின் ஆலயம் மயிலாப்பூர் மறைமாநிலத்தின் ஓர் பங்காக மயிலாப்பூர் மறைமாநிலத்து ஆயரின் அதிகாரத்தின் கீழ்தான் இருந்தது.

1929-ஆம் ஆண்டு ஜூன் 29-ஆம் நாளன்று **பாப்பரசர் 11-ஆம் பத்திநாதர்** போர்த்துக்கீசிய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, பதுரவதோ ஞான அதிகார சலுகை முற்றிலும் நீக்கப்பட்டு தனது பாப்பிறை மடல் 'Quea ad Spirituale' மூலம் முத்துக்குளித்துறையின் குறிப்பிட்ட 5 பங்குகளும் மயிலாப்பூர் மறைமாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, தூத்துக்குடி மறை மாநிலத்தோடு இணைக்கப்பட்டன.



1707-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாளன்று, பரிசுத்த பனிமய அன்னை அற்புத திருச்சுரூபத்தின் மீது இடி விழுந்த நிகழ்வை நிரந்தரமாக நினைவுறுத்தும் வண்ணம், 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாளன்று, பனிமய அன்னை ஆலயம் தூத்துக்குடி மறைமாநில ஆயர் **மேதகு ரோச் ஆண்டகை** அதிகாரத்தின் கீழ் வந்தது.



தூத்துக்குடி மறைமாநிலத்தின் அதிகாரத்தில், பனிமய அன்னை ஆலயத்தின் முதல் பங்குக் குருவாக **அம்புரோஸ் மிஸியர் சுவாமிகள்** பொறுப்பேற்றார்.

**இதர 4 பங்குகள்**

வைப்பார் பரலோக அன்னை ஆலயம் 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாளன்று தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இணைந்தது. முதல் பங்குக் குருவாக **F.M. பாக்கியர் சுவாமிகள்** பொறுப்பேற்றார்.

புன்னக்காயல் புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் நாளன்று தூத்துக்குடி மறை மாவட்டத்தோடு இணைந்து, அங்குள்ள புனித சவேரியார் ஆலயப் பங்கோடு சேர்க்கப்பட்டது. இரு பங்குகளுக்கும் பங்குக் குருவாக **B.S. சூசைநாதர் சுவாமிகள்** பொறுப்பேற்றார். இன்று இவ்வாலயம் அழிந்து போயிற்று.

மணப்பாடு பரிசுத்த ஆவி ஆலயம், 1929-ஆம் ஆண்டில் தூத்துக்குடி மறைமாவட்டத்தின் நேரடிப் பார்வைக்கு வரலாயிற்று. முதல் பங்குக் குருவாக **D. சுவாமிநாதர் சுவாமிகள்** பொறுப்பேற்றார்.

கூடுதாழை மரியன்னை ஆலயம் 1930-ஆம் ஆண்டில் தூத்துக்குடி மறை மாவட்டத்துடன் இணைந்தபோது, **அந்தோனி பர்னாந்து சுவாமிகள்** முதல் பங்குக் குருவாக பொறுப்பேற்றார்.

1748-ஆம் ஆண்டில் பரிசுத்த ரொசாரி மாதா ஆலயமாக (Church of Nostra do Razario) கட்டப்பட்ட இந்த மரியன்னை ஆலயத்தை மணல் மூடியதால், அதன்மேல் இன்று இருக்கும் புனித தோமையார் ஆலயம் 1907-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

மாதம் ஒரு மாதா படம் : 30



# நம்மோடு செபிக்கும் மாதா

**D.J.P.R. ராயன்**
சிந்தாயாத்திரை மாதா
அன்பியம்



# 11 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

அருள்தந்தை S. கபிரியேல் அடிகளார் 1970ஆம் ஆண்டு அருள்தந்தை S.M. தல்மெய்தா அடிகளாரிடமிருந்து பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கின் பொறுப்பை ஏற்றெடுத்தார்கள். அருள்தந்தை கபிரியேல் 1974ஆம் ஆண்டு வரை பங்குத் தந்தையாக பணியாற்றியதாக அறிகிறோம்.

அருள்தந்தை கபிரியேல் காலத்தில் ஆலயத்திலோ அதுசார்ந்த இடங்களிலோ மராமத்துப் பணிகள் ஏதும் நடந்ததாகத் தகவல்கள் ஏதும் இல்லை. பங்கில் ஒரு அமைதியான சூழ்நிலை நிலவியதாகத் தெரிகிறது.

அவருக்கு முன்பு பங்குப் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லாம் வரவுக்கேற்ற அளவில் பங்கின் நலனுக்காக பல மராமத்துப் பணிகளும் பல திட்ட நிறைவேற்றங்களுக்கும் செலவு செய்து பங்கிலிருந்து மாறிப் போகும்போது பங்கின் வரவு செலவுக் கணக்கில் போதுமான இருப்புத் தொகை இல்லாத நிலையிலே பொறுப்பை ஒப்படைத்துச் சென்றதாகத் தெரிகிறது.

மக்கள் திருப்பலி நிறைவேற்றுவதற்காக கொடுக்கும் தொகை, கடன் திருநாட்களில் திருப்பலியின்போது பிரிக்கப்படும் காணிக்கை போன்ற வருமானங்கள் தவிர வேறு விதமான வருமானங்கள் இல்லாத நிலையில் எவ்வாறு செலவினங்களைக் குறைத்து இருப்புத் தொகையைக் கூட்டுவது என்ற சிந்தனையில் இருந்தார்கள்.

மாதா திருவிழாவுக்காக மக்கள் தாராளமாகக் கொடுக்கும் காணிக்கைப் பணத்தை ஆடம்பரங்களில் செலவிடாமல் சிறிது சிறிதாக சேமிக்கத் தொடங்கினார்கள்.

ஆடம்பரங்களை விரும்பும் பங்கு மக்களிடம் ஆன்மீக தாகத்தை எழுப்ப அரும் பாடுபட்டார்கள். குறிப்பாக பாவசங்கீர்த்தனத்தை வலியுறுத்தி மக்களை கிறித்தவ வாழ்வில் நிலைநிறுத்த அரும்பாடு பட்டார்கள். அவருடைய பணிக்காலம் எந்த ஒரு பிரச்சனைகளோ மக்களிடையே பிளவுகளோ ஏற்படாமல் வெகு சுமூகமாகவே கடந்தது.

மக்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்படும் சில குடும்பப் பிரச்சனைகளில் தீர்வு காண அணுகும்போதெல்லாம் இன்முகத்தோடு நல்ல ஆலோசனைகளை வழங்கி ஒரு தந்தைக்குரிய பாசத்தோடு தீர்த்து வைத்தார்கள் எனச் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

அவர் பங்கில் பணியாற்றிய 5 வருடங்கள் கட்டுரையாளர் கேரளத்தில் நடுவண் அரசுப் பணியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காரணத்தால் இக்கட்டுரையில் கொடுக்கப்



பட்டிருக்கும் தகவல்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டவை.

அருள்தந்தை கபிரியேல் அடிகளார் பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கை விட்டு மாற்றலாகி பணி ஒப்புக் கொடுத்தபோது இருப்புத் தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரத்தை ஒப்படைத்துவிட்டுச் சென்றார்களாம்.

அதுவே ஒரு முன் உதாரணமாக பிற்காலத்தில் அவருக்குப் பின் பணியாற்றியவர்கள் மாற்றலாகிப் போகும் போது பல திருப்பணிகளைச் செய்து முடித்திருந்தாலும் கணிசமான இருப்புத் தொகையை விட்டுச் செல்வதாகச் சொல்வார்கள்.

தொடரும்...



**செல்வராஜ் மிராந்தா**



31

# 'பனிமயம்' 2007 – மீள் பார்வை

அன்னை மரியா குறித்து கத்தோலிக்கத் திருச்சபையின் தெளிவான போதனைகள் நான்கு. அவை :

1. மரியா – இறைவனின் தாய் (கி.பி. 431)
2. மரியா – என்றும் கன்னி (கி.பி. 553)
3. மரியாவின் அருள்மிகு அமல உற்பவம் (கி.பி. 1854)
4. மரியாவின் விண்ணேற்பு (கி.பி. 1950)

இந்நான்கு கோட்பாடுகளும் பல காலகட்டங்களில் எழுந்தவை. இவை நான்கிற்கும் பல தனித்தன்மைகள் உண்டு. அதுபோல, இவை நான்கிற்கும் சில பொதுத் தன்மைகளும் உண்டு.

இக்கோட்பாடுகள் இறைவனின் ஞானத்தையும், மானிடருக்கான இறைமீட்புத் திட்டத்தையும் அடித்தளமாகக் கொண்டுள்ளன.

திருச்சபைப் போதனைப்படி அன்னை மரியாவை, தலைமுறை தலைமுறையாய் வாழ்த்துவோம். அவளது அன்புப் பிள்ளைகளாய் வாழ்ந்து, சான்று பகருவோம்.

**– பணி. A.K. ஜெரோஸின்**

**மரியன்னையும் மார்ட்டின் லூத்தரும்**



இன்று புற்றீசல்போல் எங்கும் பெருகிவிட்ட பெந்தகோஸ்து சபைகளெல்லாம் அறிக்கையிடும் – "விவிலியம் மட்டுமே போதும்; திரு மரபு தேவையில்லை!" – என்னும் கூக்குரலின் முதல் சொந்தக்காரர், மார்ட்டின் லூத்தர்தான்!

ஆனால், அன்னை மரியா பற்றி மார்ட்டின் லூதர் போதனைகளை ஆழ்ந்து சிந்தித்தால், கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்ல, மார்ட்டின் லூத்தரைப் பின்தொடர்ந்த அனைத்து பைபிள்காரர்களுக்கும் வியப்பாகத்தான் இருக்கும்!

மறை உண்மைகள் நான்கு (மேலே சொல்லப்பட்டுள்ளது)

1. மரியா இறைவனின் தாய் என்பதை லூதர் ஏற்றுக் கொண்டார்.
2. அன்னை மரியா கடவுளின் தாய், அதே வேளையில் என்றும் கன்னி என்று போதித்தார் லூத்தர்.
3. "கடவுள் மரியாவின் உடலையும், ஆன்மாவையும் தூய ஆவியால் முற்றிலும் நிரப்பியதால், அவரிடம் எந்தப் பாவமும் இல்லை" – என்றார் லூத்தர்.
4. "அன்னை மரியா விண்ணகத்தில் இருக்கிறார் என்பதில் எந்த ஐயமுமில்லை. அது எப்படி நடந்தது என்றுதான் தெரியவில்லை" – என்றார் லூத்தர் (ஆதாரம் – MARTIN LUTHER'S WORKS)

அன்னை மரியா பற்றி கத்தோலிக்கர்களின் அடிப்படை மறையுண்மைகள் நான்கையும் "விவிலியம் மட்டுமே போதும் என்று சொன்ன மார்ட்டின் லூத்தர் ஏற்றுக் கொண்டார். அவரைப் பின்பற்றிய 'விவிலியவாதிகள்' மட்டும் ஏனோ ஏற்க மறுக்கிறார்கள். – **அருள்வேந்தன்.**

★ சித்திரப் பொன்தேரில் இறைவனின் தாய்... திருமந்திர நகரம் எங்கும் விழாக்கோலம்! தாயைச் சந்திக்கும் சேய்போல் முகம் எல்லாம் மலர்ச்சி! மனம் எங்கும் மகிழ்ச்சி!

வாராது வந்த மாமணியாக – வானத்து நிலவாக – வையகத்துச் சொத்தாக – சொர்ண ரதத்தில் – சித்திரப் பொன் தேரில் – தங்க மேனியளாய் நமதன்னை திவ்ய சந்த மரிய தஸ்நேவிஸ் தாயார், உலக மாந்தர் புடைசூழ, ஆசீர் வழங்கிக் கொண்டே வருகிறாள் வீதி வலமாக! – **பொறுப்பாசிரியர் கலாபன் வாஸ்.**

★ மனிதர்கள் இறைவனுக்கு ஆயிரம் தேர்கள் உருவாக்கலாம். ஆனால், மனிதர்களுக்காக - மனிதரிடமிருந்து - இறைவன் உருவாக்கிய ஒரே ஒரு தேர் - தங்கத்தேர் - அன்னை மரியாதான்! - **அருட்பணி. டைட்டஸ் ரோஷன்.**

★ **சிப்பியும் முத்தும்!** - “மரியாள் ஒரு சிப்பி! அவளிடமிருந்து பிறந்த இயேசு ஒரு முத்து. முத்தை எடுத்துக்கொண்டு, சிப்பியை எறிந்து விட வேண்டும்” - என்று கூறினாராம் ஒரு பிரபல பேச்சாளர்!

மேற்கூறிய விளக்கத்திலிருந்து, இது எவ்வளவு பெரிய தவறு - எத்துணை அறியாமை - ஏன் இவ்வளவு துவேஷமான வார்த்தை என்பது விளங்கும்.

தாய்ப் பாசம், தந்தைப் பற்று வெகுவாகக் குறைந்துபோன இக்காலத்தில், இப்படித்தான் செய்கிறார்கள் - அதாவது, வளர்ந்து வயதுக்கு வந்தால், சம்மதிக்க ஆரம்பித்ததும், பெற்றோர்களைச் சிப்பியைப்போல் எறிந்து விடுகிறார்கள்!

இதைவிட மோசமான நடத்தை இருக்க முடியுமா? இவ்வளவு அநாகரீகமான நடத்தையை மனிதப் பிறவியெடுத்தவர்கள், முதலிடம் வகிக்கும் இயேசுவுக்குப் பொருத்திக் கூறுவதைவிட மோசமான செயல் இருக்க முடியாது.

மேலும், ஒரு தாயைச் சிப்பிக்கும், குழந்தையை முத்துக்கும் ஒப்பிடுவது சிறிதும் பொறுத்தமற்றது. சிப்பி, முத்தைப் பாதுகாப்பது ஒன்று, சிப்பியிலிருந்து முத்து உருவாகிறது என்று யாராவது கூறுவார்களா? மாறாக, தாயின் உதரத்தில், தாயின் உயிர்ச் சத்தைப் பயன்படுத்தியே குழந்தை உருவாகிறது. தாயின் உதரம், குழந்தையைப் பாதுகாக்கும் வெறும் கவசமல்ல, இரத்தமும் உணவும் உயிரும் குழந்தைக்கும் போகச் செய்யும் அரிய அமைப்பு, இறைவனே உருவாக்கியதொன்று. இதற்கு ஈடாகச் சிப்பியைப் பேசுவது சிறிதும் பொருத்தமற்றது.
- **பேராயர் இரா. அருளப்பர்**

★ நிலாவிலே பாதம் பதித்திருந்தாலும் - நீ
உலா வருவதோ
பூமியில்தான்!
வெற்றிக் கனிமயம்தான் - இந்த
பனிமயத்தைத் தேடி வருவோருக்கு!
மாதர்குலப் பெருமைக்காய்
யூதர் குலந் தந்த
தாரகை நீ!
உம் மனசு பரிசுத்தம் - எனவே தான்
சம்மனசு தோன்றினார் உம்மிடம்
அருள் நிறைந்தவளே என்று!
**- லியோனா**

★ **புது விடியல்!**
- இருளுக்குப் பின், ஒளி மயமான பகல்!
மண்ணில் மக்கிய வித்திலிருந்து,
புதியதொரு தரு!
புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை -
விதைக்கப்படுகிறார்கள்!
மனுக்குல மீட்புக்காகச் சிலுவைச் சாவை
ஏற்றுக்கொண்ட இயேசு,
விதைக்கப்படுகிறார் - மாட்சிமையோடு
உயிர்த்தெழுகிறார்!
**- கலாபன் வாஸ்**

‘மரியாவின் பிள்ளை அவலமாய்ச் சாகாது’
**- வணை. சிலுவைமுத்து**
**தல்மேதா சுவாமி**



**கலாபன் வாஸ்**
94863 90793



நம் திருச்சபை, நமது பெருமை - 9

# சமூகப் பணிகளின் முன்னோடி!



இன்று உலகம் முழுவதும் எத்தனையோ தனி நபர்கள் (வாரன் பஃப், பில் கேட்ஸ்), நிறுவனங்கள் (ரெட் கிராஸ்) சமூகப் பணிகளை ஆற்றி வருகிறார்கள். எங்கெல்லாம் வறுமை, பசி, நோய், இயற்கைச் சீற்றங்கள் மானிட இனத்தின் ஒரு பகுதியைப் பாதிக்கின்றனவோ, அங்கெல்லாம் இவர்கள் உதவியை உடனே அனுப்புகிறார்கள்.

இவர்கள் யாரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்? நிச்சயமாக, நமது கத்தோலிக்கத் திருச்சபையிடமிருந்துதான். ஆம், நமது திருஅவைதான் 21 நூற்றாண்டுகளாக தேவையில் உழலும் மானிடர்களைத் தேடிச் சென்று மாந்தநேய உதவிகளைச் செய்துவருகிறது. நம் திரு அவையின் சமூகப் பணிகளுக்காக நிச்சயம் நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

**திருச்சபை பிறந்தபோதே சமூகப் பணியும் தொடங்கியது.** திருத்தூதர் பணிகள் நூலில் தொடக்கத் திருஅவையின் வாழ்வு முறையைப் பார்த்து பெருமிதம் கொள்கிறோம். “நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது” (திப 4:32).

“தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. நிலபுலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டுவந்து திருத்தூதருடைய காலடியில் வைப்பர். அது அவரவருடைய தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்” (திப 32: 34-35).

அப்பொழுதிலிருந்து திருச்சபையின் அன்புப் பணிகள், அறப்பணிகள் தொடங்கின. “இருப்பவர்கள் இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழ்வதே உண்மையான கிறித்தவம்” என்பதை வாழ்ந்துகாட்டினர் தொடக்க காலக் கிறித்தவர். யூதர்களைத் தாண்டி, புற இனத்தாரும் கிறித்தவத்தைத் தழுவியபோது, அவர்களும் இந்த அறப்பணியில் இணைந்துகொண்டனர். வறுமையில் வாடும் இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணியைப் பற்றிக் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் பவுலடியார்

விவரமாக விளக்குகிறார். "நீங்கள் திருத்தொண்டாக ஏற்றுக்கொண்ட இப்பணி இறைமக்களின் தேவையை நிறைவு செய்வது மட்டுமன்றி, பலர் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியின் நிறைவாக அமையும்" (2 கொரி 9: 12) என்று அவர்களை ஊக்கப்படுத்தினார்.

அதன்பின் திருத்தொண்டர் லாரன்ஸ், புனித அம்புரோஸ் போன்றவர்கள் ஏழைகளுக்குத் தொண்டாற்றி, திருச்சபையைப் பெருமிதப் படுத்தினர். ஒவ்வொரு நூற்றாண்டிலும் சமூகப் பணிகளில் சிறந்து விளங்கிய புனிதர்களை நாம் காணலாம். அவர்களுள் மிகவும் பிரபலமானவர்கள் உரோமை நகர புனித பிரான்சிஸ், அசிசி நகர புனித பிரான்சிஸ், புனித மார்ட்டின் தே போரஸ், புனித வின்சென்ட் தே பவுல், புனித ஜெம்மா கல்கானி முதலியோர். நம் காலத்தவரான அருளாளர் அன்னை தெரசாவின் அன்புப் பணிகளை உலகமே வியந்து பாராட்டியது, நோபல் பரிசு வழங்கிப் பெருமைப்படுத்தியது. இவர்கள் அனைவரும் திருச்சபையின் மணி மகுடங்களே.

**திருஅவை உலகின் மிகப் பெரிய தொண்டு நிறுவனம்.** கடந்த 21 நூற்றாண்டுகளாகத் திருஅவை இறைவழிபாட்டோடு இணைந்து அறப் பணிகளை, அன்புப் பணிகளை உலகம் முழுவதும் ஆற்றிவருகிறது. அறப் பணிகள் ஆற்றுவதில் உலகிலேயே மிகப் பெரிய தொண்டு நிறுவனம் எது என்றால், அது கத்தோலிக்கத் திருஅவைதான். இதில் மாற்றுக் கருத்து எதுவுமில்லை.

"அமெரிக்காவில் நடைபெறும் சமூகப் பணிகளில் ஐம்பது விழுக்காடு கத்தோலிக்கத் திருஅவையால் தரப்படுகிறது" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ஒக்லஉறாமா மாநில முன்னாள் ஆளுநர் திரு. ஃப்ராங் கீடிங் (Frank Keating).

மேலும், அங்குள்ள "கத்தோலிக்க அன்புப் பணிகள்" (Catholic Charities USA) என்னும் கத்தோலிக்க நிறுவனம் அமெரிக்க அரசாங்கத்திற்கு அடுத்து, சமூகப் பணிகள் ஆற்றும் மிகப்பெரிய நிறுவனமாக இயங்கிவருகிறது. இத்தகவல் கத்தோலிக்கர் அல்லாதோருக்கு வேண்டுமானால், வியப்பினைத் தரலாம். ஆனால், திருஅவை வரலாறு அறிந்தோருக்கு அது இயல்பான தகவலே.

அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் சமூகப் பணிகள் ஆற்றுவதில் முன்னிலை வகிக்கிறது கத்தோலிக்கத் திருஅவை. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் சமூகப் பணி நடுவங்கள் இருக்கின்றன. இவை ஆற்றுகின்ற பணிகள், இவர்களிடம் உதவி பெறும் மக்களின் எண்ணிக்கை இவற்றைக் கணக்கெடுத்தால், உலகின் மிகப்பெரிய சமூகப் பணித் தொண்டு நிறுவனம் கத்தோலிக்கத் திருஅவைதான் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

**தொண்டாற்றும் கத்தோலிக்க இயக்கங்கள்.** மறைமாவட்டங்கள் தவிர்த்து, உலகளாவிய வகையில் சமூகப் பணிகள் ஆற்றும் வகையில் பெரிய தொண்டு நிறுவனங்களைக் கொண்டுள்ளது நம் திருஅவை.

நாம் அனைவரும் நன்கு அறிந்த **புனித வின்சென்ட் தே பவுல் சபை** அவைகளில் ஒன்று. "ஏழைகளுக்குப் பணி செய்வதன் மூலம் நம்மைப் புனிதப்படுத்த" என்னும் நோக்குடன் இயங்கி வரும் வின்சென்ட் தே பவுல் சபை 1833 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் **அருளாளர் ஃபிரடிரிக் ஓசானம்** அவர்களால் தொடங்கப்பட்டது. இன்று உலகின் 148 நாடுகளில் 1.3 மில்லியன் உறுப்பினர்களுடன் மிகப்பெரிய தொண்டு நிறுவனமாக இயங்கிவருகிறது.

கிறித்தவக் கோவில்களோ, பொது வழிபாடுகளோ இல்லாத நாடான சவுதி அரேபியாவில்கூட வின்சென்ட் தே பவுல் சபை வெற்றிகரமாக இயங்கிவருகிறது என்பதும், அங்கிருந்து இந்தியா உள்பட பல நாடுகளுக்கு நன்கொடைகள் செல்கின்றன என்பதும் எத்துணை பெருமை தருவன!

*தொடர்ச்சி.... அடுத்த இதழில்...* **"க்றிஸ் மிலியன்"**

# விவிலியப் போட்டி 87

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

## திருத்தூதர் பணிகள் அதிகாரம் 1 முதல் 10 வரை

**கோடிட்ட இடங்களை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. மகிழ்ச்சியோடு தலைமைச் சங்கத்தை விட்டு வெளியேறியவர்கள் யார்?
2. வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்று கூறியவர் யார்?
3. ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று வேண்டியவர் யார்?
4. பிற்பகல் மூன்று மணிக்கு பேதுருவோடு கோவிலுக்குச் சென்றவர் யார்?
5. இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவில் நூற்றுவர் தலைவர் யார்?
6. இயேசுவை இறைமகன் என்று தொழுகைக் கூட்டத்தில் பறைசாற்றியவர் யார்?
7. சைப்பிரசு தீவைச் சேர்ந்த லேவியர் யார்?
8. எத்தியோப்பிய அரச அலுவலருக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்?

**உயிர்ப்பின் மாதம் : உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டவர்களின் பெயர்கள் விடைகள்.**

# விவிலியப் போட்டி 86

**மார்ச் 2022** — **விடைக்குறிப்புகள்**

**1 பேதுரு**

| | | |
|---|---|---|
| 1. | கிறிஸ்துவின் பொருட்டு | 1 பேதுரு 4:14 |
| 2. | நன்மை | 1 பேதுரு 3:17 |
| 3. | செய்து | 1 பேதுரு 3:6 |
| 4. | துன்புற்றால் | 1 பேதுரு 4:16 |
| 5. | அந்நாளிலே | 1 பேதுரு 1:6 |
| 6. | மாண்பும், பெருமையும் | 1 பேதுரு 1:7 |
| 7. | ஆன்ம மீட்பையும் | 1 பேதுரு 1:9 |
| 8. | பெற்றுக்கொள்வீர்கள் | 1 பேதுரு 5:4 |

*தவக்கால ஆசி :*

**“கிறிஸ்துவின் பொருட்டு நன்மை செய்து துன்புற்றால் அந்நாளிலே மாண்பும், பெருமையும் ஆன்ம மீட்பையும் பெற்றுக்கொள்வீர்கள்”**



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 141**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 148**

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் : 88709 26751.

**அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.04.2022**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 148**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 93**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. அந்தோனியார் அன்பியம் - **லூக்காஸ் சகாயம்**
2. அன்னை தெரசா அன்பியம் - **ஜூலியஸ் ஜெயரூபி**
3. அன்னை வேளாங்கன்னி அன்பியம் - **ஆரோன் ஷாரோன்**
4. கிறிஸ்தரசர் அன்பியம் - **ஸ்டானி ராஃபியா**

**விடை எழுதிய அன்பியங்கள் : 26**

**பாராட்டுக்குரியவர்கள் : 89**

5. அருள்சகோ. ரோசம்மாள்
6. அருள்சகோ. சோஃபியா

**அந்தோனியார் அன்பியம்**

7. சரோஜா
8. பிருந்தா சார்லஸ்
9. ஜெயா
10. சான்டினோ
11. ரீனா மொறாயிஸ்

**அன்னை தெரசா**

12. ரெய்சா சுஜய்
13. சுகன் மோனிஷா
14. சுரேஷ் பிரேமா
15. நமிஷா

**அன்னை வேளாங்கன்னி**

16. டென்சி
17. நான்சி சில்வஸ்டர்
18. இசக்கியம்மாள் விஜிலஸ்

**கிறிஸ்தரசர்**

19. ஜூலியட் சாவியோ
20. செலஸ்கி கிளமென்ட்
21. ரெக்ஸ் க்ரீன்வெல்
22. லூரட் வசந்த்
23. ராஜா ஐரின்

**தஸ்நேவிஸ் மாதா**

24. ஸ்டெனி திவாஸ்

**திவ்ய பாலன் அன்பியம்**

25. சகாயராணி தனராஜ்
26. பிரின்சி சே.

**பாத்திமா மாதா**

27. ஜெசிந்தா கான்ஸ்டன்
28. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
29. ஆன்ட்ரியாடாரல்

**இரக்கத்தின் மாதா**

30. பிரைட்டன் ஜெரோபின்
31. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**

32. கல்யாணி செல்வராஜ்
33. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**

34. டிரைபேனா
35. ஸ்வீன்சி ஃப்ராங்கோ
36. டெரன்சியா அரிஸ்டோ
37. செல்வராணி ரொட்ரிகோ

**காவல் தூதர்**

38. ஆரோக்கியடெய்சி
39. வெனிட்டாள்
40. ஜெயா அகஸ்டின்
41. ட்ரினிஷா
42. ஜோனத்தான்

**குழந்தை தெரசா**

43. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**

44. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**

45. ஆலிவர் ஜெனோரா
46. ஃபிலோ கோமஸ்
47. ஜெனோ சேவியர்
48. ரம்யா
49. ரஜூலா ஜான்போஸ்கோ
50. சான்டினா
51. ரோஸ்லின் தாமஸ்
52. சகாயராணி
53. மனுவேல் இன்ஃபனி

**மணல் மாதா**

54. கெயிட்டன் ஃபர்னான்டோ
55. ரொசாரிகோமஸ்

மிக்கேல் அதிதூதர்

56. வினோ அந்தோனி
57. இன்ஃபன்ட் ஜோஸ்னா

**பனிமய அன்பியம்**

ஒருவருமில்லை

**பவுலடியார்**

58. லீமாரோஸ் ஜாய்
59. ராஜா ரோஸ்லின்
60. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரண மாதா**

61. மெடோனா
62. ஜெனிஷா

**பொம்பெயி மாதா**

63. டயானா டெரிக்
64. லூடா கான்ஸ்டன்
65. மாத்யூ கர்டோசா
66. தெரசா பிரகாஷ்
67. இம்மாக்குலேட்
68. ஜான்சி ராணி

**இராயப்பர்**

69. ஷைனி
70. இந்திரா ரெஃப்லின் மிசியர்
71. நேவிசம்மாள்
72. டெய்சி

**சவேரியார்**

73. டெலிலா அமலன்
74. ரூபா மனுவேல்
75. அண்டன் சகாயம்
76. ஆக்னல் ஆன்சன்
77. ஆரோக்கியராஜ் ஹெலினா
78. ஜோர்னல் ஜென்சி

**செபஸ்தியார்**

79. அந்தோனியம்மாள் டென்சிங்
80. ஜெசிலா சேவியர்
81. பிரவீனா

**சிந்தாத்திரை மாதா**

82. டிஜேபிஆர் இராயன்
83. நேசம்
84. ஸ்வீட்லின் ரான்சா

**சிறுமலர் அன்பியம்**

85. ஒஃபிலியா தாமஸ்
86. விஜி சகாயராஜ்
87. எல்சிட்டா ஆனந்தன்
88. ஜோசப் வி. ராயர்

**சூசையப்பர்**

89. கிறிஸ் ரிஜோ
90. ரூபி கொர்னேலியுஸ்
91. மென்சி

**திருச்சிலுவை**

92. கைத்தான் ரமணி
93. மேரி கிரேட்டா

**வியாகுல மாதா**

ஒருவருமில்லை

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 55

### பரிசு பெறுபவர்கள் : 4

1. **எட்வர்ட் அமலி**, சென்னை
2. **சபாஸ் கொரற்றி**, ஆலந்தலை
3. **ரோசாலி**, திண்டுக்கல்
4. **ஜூலியட் வாஸ்**, தூத்துக்குடி

### பாராட்டுக்குரியவர்கள் : 51

**ஆலந்தலை**
94. ஃபொன்சேகா
95. மரியம்மாள்
96. சகாயராணி

**ஆறுமுகனேரி**
97. தொம்மை அந்தோனி

**சென்னை**
98. கமலஜோதி ஜெயசீலன்
99. சகாயராணி இம்மானுவேல்

**பாளையங்கோட்டை**
100. பிரேமா குணசீலன்
101. சொர்ணா ஃபர்னான்டோ
102. டெனிசா

**கயத்தாறு**
103. அமல்ராஜ்

**உரியூர்குப்பம்**
104. அருள்சகோ. லெட்டீசியா

பட்டுக்கோட்டை
105. ரோஸ் மேரி

**பெரியகுளம்**
106. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
107. ஜெர்மோன்
108. மரிய மதலேன்

**கோவை பல்லடம்**
109. பிரான்சிஸ் ஆர்லன்
110. ஆஷா தனசீலன்

**திருச்சி**
111. மோனிட்டா கிறிஸ்டி
112. ஸ்டெல்லா

**மதுரை**
113. அருள்சகோ. அப்போலின்

**வடக்குத்து**
114. ஹென்றி தாஸ்

**கன்னியாகுமரி**
115. சராஃபின் ஜோசப்;

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
116. பெனிட்டா
117. எல்சி
118. சுசீலன்
119. ரமோலா கமிலஸ்
120. ரிமோல்டா

**குருஸ்புரம்**
121. பிளாசி செல்வராஜன்
122. ஜான்சி மென்டிஸ்
123. செ.தா. ஆசீர்வாதம்
124. தமிழ்ச் செல்வன்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
125. செரினா
126. சுகிர்தா
127. செல்வம் டெலிசியா

**யூதா ததேயு கோவில்**
128. ரோஸ் சேவியர்
129. கமிலஸ் மோத்தா

**காந்திநகர்**
130. சாந்தினி
131. ரியாலினோ
132. ஃபின்டன் சோஃபியா
133. ரமேஷ் நர்மதா
134. பேபி வால்டர்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
135. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
136. விஜியா பர்னாந்து
137. ராணி சேகர்
138. ஜெசிந்தா ஃபர்னான்டஸ்

**இஞ்ஞாசியார்புரம்**
139. அற்புத செல்வி
140. சூசை நெவின்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
141. குழந்தை தெரசா எஸ்.

**அந்தோனியார் கோவில்**
142. மென்சிலா லொயோலா

**லூர்தம்மாள்புரம்**
143. ரெனிஸ்டன் ஜெர்லின்

**திரேஸ்புரம்**
144. பிலோ சான்ட்ரியா
145. கோல்வின் சேசுராஜ்

**புனித சார்லஸ் கோவில்**
146. சகாயிட்டா மச்சாது
147. விர்ஜின் சகாயராஜ்
148. ஸ்டெல்லா குமார்



**பனிமய சாட்சியம் : 54**

பனிமய சாட்சியம்

## வசந்தி, பங்கஜம் சகோதரிகள், தூத்துக்குடி

தூத்துக்குடியில் வாழும் வசந்தி, பங்கஜம் சகோதரிகள் பனிமய அன்னைமீது தீராத பாசமும், பற்றும் கொண்டவர்கள். கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்திலும்கூட வீட்டைவிட்டு வெளியே செல்வதாக இருந்தால், பனிமய அன்னையின் பேராலயத்துக்குத்தான் வருவார்கள். ஆண்டுதோறும் அன்னையின் பெருவிழாவுக்கு பெரும் நன்கொடையும் தாராளமாகத் தருபவர்கள். அவர்களின் மரியன்னைப் பற்று நமக்கு ஊக்கம் தரும் நம்பிக்கை போன்றது. அண்மையில் இருவரும் வந்து, தங்களது பேத்தி **காவ்யா**வுக்கு, பனிமய அன்னையின் பரிந்துரையால் நல்ல மணமகன் **அர்விந் கார்த்திகேயன்** கிடைத்துள்ளார் என்றும், 03.04.2022 அன்று கோவில்பட்டியில் திருமணம் நடைபெறவிருக்கிறது என்னும் நல்ல செய்தியை சாட்சியாகப் பகிர்ந்து கொண்டார்கள். பனிமய அன்னைக்கு நன்றியறிதலாக 1 கிராம் தங்கத் தாலி ஒன்றைக் காணிக்கையாகத் தந்தார்கள். பேத்தியின் திருமண நன்றியாக கூட்டுத் திருமணத்திற்கும் தாராளமாக நன்கொடை தந்தார்கள். அவர்களை மனமாரப் பாராட்டுவோம். பனிமய அன்னையே வாழ்க!

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 33)

## ஏப்ரல் - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி விமல்ஜேன் | 9791529877 |
| களப் பணியாளர் | : | சகோதரர் அசாத் | 88709 26751 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் காலை 06.00 - 06.30*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *கூட்டுத் திருமணம்* : 08.05.2022
- ✓ *உறுதிப்பூசுதல் அருள்சாதனம்* : 29.05.2022
- ✓ *புதுநன்மை அருள்சாதனம்* : 31.07.2022

*பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.30 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*

## பனிமயச் சுவடுகள்

**(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)**

332. பேராலய பங்கு மேய்ப்புப் பணிச் செயற்குழுவின் முடிவின்படி பேராலய மண்டப மேல்தள ஓடுகள் மாற்றி அமைக்கப்பட்டன. புனித சவேரியார் மேடை தரைத் தளம் புதுப்பிக்கப்பட்டது.

333. தவக்காலத்தை முன்னிட்டு திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் ஏழு செவ்வாய்க்கிழமைகளில் “ஏழு தலையான பாவங்கள்” என்னும் தலைப்பில் பிற்பகல் 02.00 முதல் 04.00 வரை தியான உரை, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 01.03.2022 செவ்வாய் அன்று **“ஆணவம்”** என்னும் தலைப்பில் அருள்பணி. ரெயோசில் பெப்பி தியான உரை வழங்கினார்கள். ஏறக்குறைய 100 பேர் கலந்துகொண்டனர்.

334. தவக்காலத்தின் தொடக்க நாளான “சாம்பல் புதன்” 02.03.2022 அன்று மூன்று திருப்பலி களிலும் சாம்பல் பூசப்பட்டது, நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை தவக்கால நோன்பு வழிபாடு நடைபெற்றது. அதில் செபமாலை, சிலுவைப்பாதை, இறைவார்த்தைப் பகிர்வு, நற்கருணை ஆராதனை ஆகியன இடம்பெற்றன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின்படி, உக்ரைன் நாட்டில் போர் நின்று அமைதி நிலவ வேண்டுமென்று மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

335. மாதத்தின் முதல் வியாழனான 03.03.2022 அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும், தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, “சொல்ல மறந்த பாவங்கள்” என்னும் தலைப்பில் ஆன்ம சோதனை நடத்தப்பட்டது. நற்கருணை ஆசீரைத் தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது,

336. மாதத்தின் தலைவெள்ளியும், தவக்காலத்தின் முதல் வெள்ளியுமான 04.03.2022 அன்று காலை 04.30 மணிக்குப் பேராலயத்தைச் சுற்றி நடைபெற்ற அதிகாலை சிலுவைப்பாதையில் திரளான இறைமக்கள் கலந்துகொண்டனர். அன்று மாலை 04.30 மணிக்கு நடைபெற்ற சிலுவைப்பாதையைத் திருக்குடும்ப சபையினர் வழிநடத்தினர். இரவு 07.00 மணிக்கு நடைபெற்ற சிலுவைப்பாதையை பங்கின் அருள்சகோதரிகள் நடத்தினர்.

337. மாதத்தின் முதல் சனியாகிய **05.03.2022** அன்று மாலையில் சப்பரப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. இவை நேரலையாகவும் ஒளிபரப்பப்பட்டன.

338. கடந்த 13.03.2022 ஞாயிறு அன்று இரண்டு பேருந்துகளில் நமது பங்கு மக்கள் 106 பேர் தவப்பயணமாக மங்கலகிரி, பாளை அந்தோனியார் திருத்தலம், டோனாவூர், கன்னியாகுமரி, உவரி, மணப்பாடு, ஆலந்தலை உள்ளிட்ட திருத்தலங்கள் சென்று வந்தனர்.

339. மார்ச் மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (17)** 19.03.2022 சனி அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. “தொழில் நிறுவனங்களின் ஆசீர்வாதங்களுக்காக” என்னும் கருத்துக்காக நடைபெற்ற இவ்வழிபாட்டில் **80** நிறுவனங்களின் ஆசிகளுக்காகப் பரிந்துரைத்து மன்றாடப்பட்டது.

340. 20.03.2022 மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் தவப் பவனி நடைபெற்றது.

341. தவக்கால விவிலியப் பாசறை (78) கடந்த 21.03.2022 திங்கள் மாலை “இறுதிக் காலப் பாவங்கள்” என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. 32 பேர் கலந்துகொண்டனர்.

342. பேராலயப் பங்கு மக்களுக்கான ஒருநாள் தியானம் மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் 27.03.2022 ஞாயிறு அன்று நடைபெற்றது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *இறைவனைப் போற்றுகிறோம்*

### 1. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 21. | ஏர்னஸ்டின் கர்டோசா | மைக்கேல்ராஜ் | 12-03-2022 | தஸ்நேவிஸ் மாதா |



### *செபிக்கின்றோம்*

### 2. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 120. | மேரி மிசியர் | ரிச்சர்ட் மொராயிஸ் | 25-02-2022 | சவேரியார் |
| 121. | ஸ்டனிஸ்லாஸ் பி. ராயன் | ஜெஸி | 23-03-2022 | பனிமயம் |

## நடைபெற இருப்பவை

- ★ புனித வாரத் திருநிகழ்வுகள் 10.04.2022 குருத்து ஞாயிறு அன்று தொடங்குகின்றன. புனித வாரத் திருநிகழ்வுகள் தனியே அச்சிடப்பட்டுள்ளன.
- ★ எதிர்வரும் **02.04.2022 முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். அவை நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 01.04.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 23.04.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (18)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை "அரசுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்காக" நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 71. | 05.04.2022 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் மைக்கேல் | தலையான பாவம்:6<br>பெருந்தீனி ஆர்வம் |
| 72. | 12.04.2022 | செவ்வாய் | அருள்பணி. மார்டின் குமார் | தலையான பாவம்:7<br>சோம்பேறித்தனம் |
| 73. | 19.04.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | உயிர்ப்பின் வாழ்வு வாழ்வோம். |
| 74. | 26.04.2022 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | வெற்றி வாழ்வு வாழ்வோம்! |
| 75. | 03.05.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | விடுதலை வாழ்வு வாழ்வோம்! |



# தூய பனிமய அன்னை பேராலயம், தூத்துக்குடி

## புனித வாரத் திருநிகழ்வுகள் - 2022

### 10.04.2022 - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

| | |
|---|---|
| காலை 05.00 | முதல் திருப்பலி |
| காலை 06.15 | தூய சவேரியார் மண்டபத்தில் குருத்தோலை மந்திரிப்பு, பவனி, பேராலயத்தில் திருப்பலி |
| காலை 08.15 | மூன்றாம் திருப்பலி |
| காலை 09.30 | நான்காம் திருப்பலி (ஆங்கிலம்) |
| காலை 11.00 முதல் 03.00 வரை | திருச்சிலுவை சிற்றாலயத்தில் நோன்புத் தியானம் : "சிலுவையிலிருந்து 7 வார்த்தைகள்" - **அருள்பணி. இராயப்பன்** |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி |
| மாலை 06.30 | நற்கருணை ஆசீர் |



### 11.04.2022 - புனித வார திங்கள்

| | |
|---|---|
| காலை 05.30,06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி - தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |

### 12.04.2022 - புனித வார செவ்வாய்

| | |
|---|---|
| காலை 05.30,06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | **மாலைத் திருப்பலி நடைபெறாது.** திரு இருதயங்களின் பேராலய வளாகத்தில் மேதகு ஆயர் தலைமையில் திருஎண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி. |

### 13.04.2022 - புனித வார புதன்

| | |
|---|---|
| காலை 05.30,06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி - தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |

### 14.04.2022 - புனித வியாழன் - ஆண்டவரின் இராவுணவு

| | |
|---|---|
| மாலை 06.00 | பேராலய வளாகத்தில் திருப்பலி, பாதம் கழுவும் சடங்கு. திருப்பலி முடிவில் நற்கருணை இடமாற்றுப் பவனி. தொடர்ந்து பேராலயத்தில் நற்கருணை ஆராதனை. |
| இரவு 08.00 - 08.30 | சவேரியார், பவுலடியார் மண்டல அன்பியங்கள் |
| இரவு 08.30 - 09.00 | அந்தோனியார், மணல் மாதா மண்டல அன்பியங்கள் |
| இரவு 09.00 - 09.30 | பாத்திமாமாதா, அன்னை தெரசா மண்டல அன்பியங்கள் |
| இரவு 09.30 - 10.00 | சூசையப்பர், இராயப்பர் மண்டல அன்பியங்கள் |
| இரவு 10.00 - 10.30 | செபஸ்தியார் மண்டல அன்பியங்கள் |



| | |
|---|---|
| *இரவு 10.30 - 11.00* | கிறிஸ்து அரசர் மண்டல அன்பியங்கள் |
| *இரவு 11.00 - 12.00* | பொது ஆராதனை |
| *இரவு 12.00* | நகர வீதிகளில் **பெரிய சிலுவைப் பாதை** பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் நடத்தப்படும். |

## 15.04.2022 - புனித வெள்ளி - ஆண்டவரின் திருப்பாடுகள்



*காலை 05.00 முதல் மாலை 03.00 வரை* — அமைதியில் நற்கருணைஆராதனை. தனியாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம்.

இன்று **உண்ணா நோன்பு** (ஒருசந்தி), **புலால் நோன்பு** (சுத்தபோசனம்), **ஊடக நோன்பு** (தொலைக்காட்சி, இணையதளம், திறன்பேசி தவிர்ப்பு) கடைப்பிடிப்போம்.

*காலை 11.30* — பேராலயத்தை சுற்றி சிலுவைப் பாதை.

*மாலை 6.00* — திருப்பாடுகளின் வழிபாடு

திருச்சிலுவை ஆராதனையின்போது பசி, பிணி ஒழிப்புக்காக, அறப்பணிக்காக தாராளமாக காணிக்கை செலுத்துங்கள்.

வழிபாட்டின் முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும்.

## 16.04.2022 - புனித சனி

**இன்றைய பகல் பொழுதை அமைதியில் கழிப்போம்.**

### உயிர்ப்பு பெருவிழா (திருவிழிப்பு)

*இரவு 11.00 மணி* — திருவிழிப்பு வழிபாடு : பாஸ்கா புகழுரை, இறைவார்த்தை, திருமுழுக்கு வழிபாடு, திருமுழுக்கு நீர் மந்திரித்தல். திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பிக்க மெழுகுதிரி கொண்டு வாருங்கள்.

## 17.04.2022 - உயிர்ப்பு ஞாயிறு



*காலை 6.30 மணி* — **மேதகு ஆயர் ஸ்டீபன்** தலைமையில் திருப்பலி

*காலை 8.00 மணி* — இரண்டாம் திருப்பலி

**ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது.**

*மாலை 6.30 மணி* — செபமாலை, உயிர்த்த இயேசுவின் திருவுருவப் பவனி, நற்கருணை ஆசீர்

**புனித வாரத் திருநிகழ்வுகள்**
தலைமை : **அருள்பணி. ஜெமல்ஸ்,** பாளை மறைமாவட்டம்

**நமது பங்கின் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் அச்சிட்டு, கடந்த ஆண்டு நாம் பயன்படுத்திய "புனித வாரக் கையேடு" உங்கள் இல்லங்களில் இருந்தால், இந்த வாரம் முழுவதும் வழிபாடுகளுக்குக் கொண்டு வந்து பயன்படுத்துங்கள். புதிதாகத் தேவைப்படுவோர், பேராலய அலுவலகம் வந்து ரூ. 5/- செலுத்தி வாங்கிக் கொள்ளலாம்.**

# விண்ணக வாழ்வின் நினைவஞ்சலி

"பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது.
என் பிரியமே! என் ரூபவதியே நீ எழுந்து வா"

(உன்னதப்பாட்டு 2:12-13)

## T. ஜெயந்தி



மண்ணில் : 26.03.1966
விண்ணில் : 02.02.2022



## J. இந்திராணி



மண்ணில் : 11.12.1946
விண்ணில் : 08.02.2022

எங்களை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் எங்கள் உள்ளங்களில் வாழ்கிறீர்கள்!

பிரிவால் வருந்தும்

கணவர் : C. தாமஸ் ஜெயந்தி
பிள்ளைகள் : ஜேனஸ், ஜெனிக்கா
குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள்
Ph : 88706 80332

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது."

(திபா 116:15)

பிறப்பு
13.06.1927



இறப்பு
13.04.2018

# C. லிட்வின் பர்னாந்து

[W/o. கொலம்பஸ் பர்னாந்து (Late)]

அன்புத் தாயை
நினைவுகூரும்

மகன் : C. ஜோன்ஸ் பர்னாந்து
மற்றும்
குடும்பத்தினர்

# இனியவள் இல்லா
# இரண்டாம் ஆண்டு
07.04.22



"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"
(தொநூ 12:2)



**"உம் இல்லத்தில்
உம் துணைவியார்
கனிதரும்
திராட்சை
கொடிபோல்
இருப்பார்"**

(திபா 128:3)



பாசத்துடன்...
அலெக்ஸாண்ட்ரியா

ஏக்கத்துடன்...
அலெக்ஸ்ரவி
இன்பென்ட்
தீபா
இன்பென்டினா
ஜீடு



சௌந்தரி ரவி

SHINY Ph : 98421 31493